**ஜா-எல பிரதேச சபை**

-------------------------------------

**கம்பஹா மாவட்டம்**

----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜா-எல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நன்கொடையாக உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து கிடைத்த ரூபா 550,000 கிரயமான பிரேலின் இயந்திரத்தின் பெறுமதியில் ரூபா 82,500 தொகையான பெறுமதி சேர் வரி பெறுமதியும் உள்ளடக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டமையால் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் அப்பெறுமதியால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32,000 பெறுமதியான ஒரு நீர்ப்பம்பி மற்றும் ரூபா 215,200 பெறுமதியான 02 அச்சிடல் இயந்திரங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறிவித்தல் பதாதைக் காட்சிப்படுத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றிலிருந்து கிடைத்து உரிய சேவை வழங்காமையின் அடிப்படையில் மதிப்பிழந்த ரூபா 71,000 தொகையான காசோலையின் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்ததாக 2017 நவம்பர் 10 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நீர்கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி கிடைத்த முத்திரைக் கட்டணம் ரூபா 5,691,254 தொகை சம்பள மீளளிப்பு பெறுவனவாக கணக்கு வைக்கப்பட்டமையினால் முத்திரை வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கந்தானை உப அலுவலகத்திற்குரிய ரூபா 193,057 தொகையான பதிவழிக்கப்பட்ட நிலுவை ஆனதவரி வருமானம், கொடுத்த கழிவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டில் களஞ்சியத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 21,798,560 தொகையான பொருள் இருப்புக்கள், பொது களஞ்சிய கணக்கில் வைக்கப்பட்டிருந்த போதிலும் களஞ்சியப் பெறுவனவு பத்திரத்தின் பிரகாரம் அது ரூபா 24,514,290 ஆனமையால் ரூபா 2,715,730 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

ரூபா 236,425 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற 11 கணக்கு விடயங்களின் ரூபா 12,843,561 கூட்டுமொத்தமான மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பட்டோலைகள் அல்லது தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படாதிருந்ததுடன் இவற்றை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிப்பதற்கு சபை தவறியிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 899,911 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | |
| (i) 17 ஆவது விதி | - | அடியிதழ் புத்தகம் பீ.எஸ் 21 மாதிரிப் படிவத்தில் பெறுவனவு மற்றும் விநியோகித்தல்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 19 ஆவது விதி | - | சபையின் அடியிதழ் புத்தகங்கள் களஞ்சியத்தின் இராக்கைகளில் விசிறிக் காணப்பட்டதுடன் பயன்படுத்தப்பட்ட சகல அடியிதழ் புத்தகங்களும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அவற்றை மீளக் கையளித்தல் தொடர்பாக எந்தப் பதிவும் அடியிதழ் புத்தகப் பதிவேட்டில் காணப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண இலக்கம் 571 | 8,346,765 | பதிவேட்டின் பிரகாரம் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,742,029 தொகையான கேள்வி வைப்பு மற்றும் ரூபா 6,604,736 தொகையான நானாவித வைப்பு என்பவற்றை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முறையே அதில் ரூபா 723,490 மற்றும் ரூபா 1,178,590 தொகைகள் 05 வருட காலத்தை விஞ்சியிருந்தது. |
| (இ) | 2016 மே 25 ஆந் திகதிய LGD/05/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | 22,407,788 | ஆதனவரி அறவிடுவதற்காக அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல், அதனை அமுல்படுத்தல், அதன் பிரகாரம் அறவிட வேண்டிய ஆதனவரி மற்றும் பிடியாணைக் கட்டணத்தை அறவிடல் குறித்த நிதியாண்டில் பூர்த்தி செய்தல் நகர செயலாளரின் பணியாக இருந்ததுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

இறைச்சிக் கடை நிலுவை வாடகை ரூபா 2,910,817 தொகை, நிலுவை வாடகை ரூபா 69,700 தொகை மற்றும் நிலுவை ஆதனவரி ரூபா 2,158,654 தொகையாக கூட்டுமொத்தமாக ரூபா 5,139,171 கணக்குகளில் மீதி சீராக்குவதாகக் காண்பித்து திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,969,197 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,124,262 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 44,645 | 52,329 | 51,739 | 25,289 | 76,406 | 49,892 | 50,839 | 28,613 |
| வாடகை | 14.439 | 17,519 | 17,424 | 8,965 | 14,449 | 13,983 | 13,783 | 9,608 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,794 | 2,423 | 3,751 | 93 | 5,084 | 3,447 | 3,510 | 93 |
| ஏனைய வருமானம் | 135,652 | 80,365 | 70,914 | 916 | 117,495 | 81,585 | 80,327 | 949 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 93,800 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை அவ்வாறே காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஏனைய வருமானத்தில் 59.24 சதவீதம் மாத்திரமே சிட்டையிடப்பட்டிருந்தமையால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமான இலக்கை அடைய முடியாதிருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 மே 26 ஆந் திகதிய LGD/05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவை ஆதனவரிக்காக ஆதனங்களைத் தடை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரம் ஆதனவரித் தொகையில் மேலதிகக் கட்டணமொன்று அறவிடமுடியுமாக இருந்த போதிலும் 2017 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 22,407,788 தொகைக்காக பிடியாணை விநியோகிக்கப்படாமையின் காரணமாக தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான ராகம சிறிய சந்தையில் 46 ஆம் இலக்க வியாபாரக் கொட்டகை 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் கடையொன்று அல்லது மரக்கறி கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார செயற்பாடுகளில் மாத்திரம் ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும் அது கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுகின்ற கடையொன்றாக நடாத்திச் செல்லப்பட்டிருந்தமை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 300 தொகைக்கு குறைவான மாதாந்த வாடகையில் கோழி இறைச்சிக் கடையொன்றாக

அனுமதியின்றி நடாத்திச் சென்றமையினால் இறைச்சிக்கடை கேள்வி கோரல் மூலம் பிரதேச சபைக்கு உயர்ந்த வருமானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் கோழி இறைச்சி கேள்விப் பத்திரங்களை பெற்றவர்களுக்கும் நியாயமற்றதாக இருந்தது. கடை உரிமையாளரினால் அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிக்குமாறு அறிவித்தல் கட்டளை ஒன்று வழங்குமாறு 2017 மே மாதத்தின் போது கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்படும் வரை சபையினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விற்பனைக் கொட்டகையின் சுகாதார பாதுகாப்புத் தொடர்பாக சபையின் பொது சுகாதாரப் பரிசோதகரின் கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) றாகம பொதுச் சந்தையில் 01 ஆம் இலக்க கோழி இறைச்சிக் கடைக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட இருந்த நிலுவை பணமான ரூபா 158,681 தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

கம்பஹா, கொழும்பு மற்றும் நீர்கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் 2014 ஆம் ஆண்டின் பின்னர் பிரதேச சபைக்கு கிடைக்காதிருந்ததுடன் அவற்றை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நிதியேற்பாடு வழங்குதல்**

(i) முன்னைய ஆண்டில் சுய உழைப்பு வருமானங்களில் மூலதன செலவினத்திற்காக 28.56 சதவீதம் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது 18.59 சதவீதம் வரை வீழ்ச்சி அடைந்திருந்தது.

(ii) 2017 இன் பாதீட்டின் பிரகாரம் பிரதேச சபையின் மூலதன செலவினத்திற்காக ரூபா 25,000,000 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 35,138,908 பெறுமதியான 69 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டமையால் மேலதிக பணம் வீதிப் பராமரிப்பு செலவினத் தலைப்பிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட அளவினை விட 33.3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது பிரதேச சபையின் மொத்த வருமானம் ரூபா 260 மில்லியனாக இருந்ததுடன் பௌதீகத் திட்டமிடல், பெருந்தெருக்கள், பாலம் நிர்மாணம் மற்றும் பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் என மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட முழுத்தொகை ரூபா 35 மில்லியனாகும் அதன்

பிரகாரம் ஆண்டின் வருமானத்தில் மூலதன செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 13.46 சதவீதமான குறைந்த அளவைக் கொண்டிருந்தது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபைக்குச் சொந்தமான 3½ ஏக்கர் அளவிலான நிலப்பிரதேசத்தில் 01 ஏக்கர் அளவில் சபையின் கூட்டுப்பசளைத் தளம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய காணியில் ஒரு பகுதி கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்பட்டதன் பின்னர் அகற்றப்படுகின்ற கழிவுகள் போடப்பட்டிருந்தது. அந்தக் கழிவுப் பொருட்கள் திறந்த வெளியில் குவிக்கப்பட்டிருந்ததுடன் பசளைத் தளத்திற்கு அருகில் வாய்க்கால் ஒன்று அமைக்கப்பட்டிருந்தமையால் மழையுடன் கழிவுப்பொருட்கள் கழுவிச் செல்லப்பட்டு நீர் அசுத்தமடைவதாகவும் அறிக்கை இடப்பட்டிருந்தது. கழிவுப் பொருட்களை மூடுவதற்காக தினந்தோறும் மண் போடப்பட்டிருந்த போதும் அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் போடப்படுகின்ற இடத்தில் 2016 பெப்ரவரி மாதத்தின் போது 50 கியூப் மண் போடப்பட்டதன் பின்னர் 50 கியூப் மண் மீண்டும் 2017 ஒக்டோபர் மாதத்தின் போது போடப்பட்டிருந்தது. உரிய கழிவுப்பொருட்களைக் கொண்டு போடுவதற்காக வேறொரு பொருத்தமான இடத்தில் கொண்டு போடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 2018 மார்ச் 02 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக விண்ணப்பிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இதுவரையிலும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 நவம்பர் 20 ஆந் திகதிய WNP/LPD/15/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையில் துண்டு கழிவுப் பொருட்களை கொண்டுபோடும் போது சுற்றாடலுக்கு சாதகமான முறையான திட்டமொன்றைப் பின்பற்றுதல் மற்றும் அதற்காக தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தப்பட்டிருந்த போதிலும் இனங்காணப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் போது பணிகளை அளவிடுவதற்கான தேவையான கட்டங்கள் மீளாய்வாண்டின் போது அறிமுகப்படுத்தப்படவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) பிரதேச சபையின் நோக்காக பொது நலன்களை வழங்குதல் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்குதல் தொடர்பான பிரதேச சபை இதுவரை எடுத்திருந்த நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. மீளாய்வாண்டில் கிடைத்த 152 முறைப்பாடுகளில் 131 முறைப்பாடுகளுக்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டமைக்கான அறிக்கை காணப்படாதிருந்ததுடன் 20 முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பின்தொடர் செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையில் கையிலுள்ள மாதாந்தம் சராசரி காசு மீதி ரூபா 88 மில்லியனாக இருந்ததுடன் அதனை வைத்திருத்தல் மூலம் பிரதேச மக்களுக்காக அமுல்படுத்த வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) பணப் பெறுமதியுடைய பற்றுச்சீட்டின் 233 அடியிதழ்கள் மற்றும் 03 வியாபார அனுமதிப்பத்திர புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

(அ) காணி கூறு பிரிக்கும் போது சபைக்கு கையளிக்கப்பட்ட வடக்கு இதிமின்ன பிரதேசத்தில் 01 ஏக்கர் 38 பேர்ச் காணிப் பிரதேசத்தில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் 02 நிர்மாணங்கள் காணப்பட்டதுடன் சபையினால் அந்தக் காணிகளின் உரித்தை பாதுகாத்துக் கொள்வதற்காக முறையான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மினுவாங்கொட ''காடின் சிட்டி'' காணி ஏல விற்பனையின் போது பொது வசதிகளுக்காக பிரதேச சபைக்கு காணிப்குதி ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணி உரித்துறுதி மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு அமைச்சிலிருந்தும் நன்கொடையாகக் கிடைத்த கலிபவுசர் மற்றும் 3 உழவு இயற்திரங்கள் என்பவற்றை சபைக்குக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

(அ) 02 பூந்தோட்டங்கள், 12 சிறுவர் மற்றும் தாய் சேய் நிலையங்கள் என்பவற்றில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் பாதீட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமானதாக இனங்காணப்பட்ட 05 வாகனங்களின் பௌதீக இருப்பு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

**3.4 பெறுகைகள்**

**3.4.1 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) சபை மண்டபத்தை நவீனமயப்படுத்துவதற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 180,000 ஒதுக்கப்பட்டு 2017 திசெம்பர் 13 ஆந் திகதி பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மேலதிகமாக செலவிடுவதற்கு ஏற்படுகின்ற கிரயம் தவிர மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 5,847,305 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தயாரிக்கப்பட்ட மாதிரிகள் உரிய பெறுகை நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6.1(அ) மற்றும் (ஆ) இன் ஏற்பாடுகளுக்குப் புறம்பான தேவையான அளவில் விபரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தொழில்நுட்பக் குழு மதிப்பீட்டின் போது மாதிரிகளுக்காக மீண்டும் திருத்தமொன்றைச் செய்யவேண்டி இருந்ததுடன் இந்த திருத்தப்பட்ட மாதிரிக்காக ஏற்படுகின்ற மேலதிக கிரயம் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுடன் குறித்துரைத்த இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்படாமையினால் சபைக்கு மேலதிகமாக செய்வதற்கு ஏற்படுகின்ற கிரயம் சரியான முகாமைத்துவத்தின் கீழ் இடம்பெறவில்லை.

(ii) சபை மண்டபத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட சபை மண்டபத்தின் ஆசனங்கள், வளிப்பதனாக்கி இயந்திரம், ஒலிபெருக்கி மற்றும் இறுவட்டுக்கள் முறைமை உரிய ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டு இருந்தமையால், சந்தையில் இருந்து நேரடியாக, ஆகக்குறைந்த கிரயத்தின் கீழ், தரமானதாகவும் பூர்த்தியானதாகவும் மிகவும் உயர்ந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இருந்த சந்தர்ப்பம் தவறி இருந்தது. இது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) மற்றும் (இ) இன் பெறுகை நோக்கங்களுக்கு முரணாக இருந்தது.

(iii) 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிக்கு முன் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டுமென ஒப்பந்தக்கார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் திகதி நீடித்தலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துடல்ல கும்புக்கஹவெல்ல தெப்பா எல ஊடாக பாலமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 2,553,779 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை 02 மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் 2017 ஒக்டோபர் வரையிலும் இந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வேலைகள் கைவிடப்பட்டமைக்கான காரணம் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்காக ரூபா 128,000 தொகையான செயலாற்றல் காப்புறுதியும் பணமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தண்டுகம கமகே வெல்ல வீதியில் தெப்பா எல ஊடாக பாலமொன்றை நிர்மாணித்தல் ரூபா 2,575,428 பெறுமதியில் 02 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு 2014 ஒக்டோபர் 20 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட 23 விடயங்களில் 12 விடயங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 537,835 தொகையான 11 விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டாக சிபாரிசு செய்யப்பட்டதன் பின்னர் 50 சதவீதமான ரூபா 1,006,720 தொகை 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதியும், எஞ்சிய 50 சதவீதமான ரூபா 1,006,720 தொகை 2017 மே 15 ஆந் திகதியும் செலுத்தப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு அண்மித்த கால தாமதத்தின் பின்னர் இறுதிக் கொடுப்பனவிற்கு உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தரால் செயல்திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பான அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பாலத்தின் கைப்பிடிகள் பொருத்தப்படாமையினால் இந்தப் பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமையும், மண் நிரப்பப்பட்டுள்ள பகுதியில் பாரிய அளவிலான குழியொன்று ஏற்பட்டு இருந்தமையினால் இந்த நிர்மாணம் வெற்றிகரமாக நிர்மாணிக்கப்படாதிருந்தமை 2017 நவம்பர் 01 ஆந் திகதிய களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | அனுமதியற்ற வகையில் நடாத்திச் செல்லப்படுகின்ற கடை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை மற்றும் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | கணக்கீடு | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமை மற்றும் மீதி உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) | செயற்திட்டத்தை அமுல்படுத்தல் | பெறுகைத் திட்டமொன்று காணப்படாமை செயல் திட்டத்தை அமுல்படுத்தும் வெளிப்படையின்றி காணப்பட்டமை |
| (ஈ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | சில சொத்துக்கள் மெய்மையாய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை |